பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

16 01 2026 FRIDAY 7.15 PM

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. நாடாளுமன்ற ஜனநாயகத்தில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. நாட்டின் புத்தொழில்களுக்கான உள்கட்டமைப்பு உலக வரைபடத்தில் பிரகாசமாக ஜொலிக்கிறது என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. நடப்பு நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உரத்தேவையை பூர்த்தி செய்து மத்திய அரசு சாதனை படைத்துள்ளது.

4. மகாராஷ்ட்ரா மாநில மாநகராட்சி தேர்தலில் பிஜேபி – சிவசேனா கூட்டணி வெற்றிபெறும் நிலையில் உள்ளது.

5. சென்னை சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் – ராம்குமார் ராமநாதன் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் -

<<<<<<<<>>>>>>>

-

பிரிட்டனின் House of Lords அவையின் தலைவர் Lord McFall of Alcluith -ஐ, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று புதுதில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் சந்தித்து பேசினார்.

இந்தியா அழைப்பு விடுத்துள்ள காமன்வெல்த் நாடுகளின் நாடாளுமன்ற அவைத் தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்ள Lord McFall வந்துள்ளார்.

இந்த சந்திப்பு குறித்து தெரிவித்த குடியரசு துணைத்தலைவர், Lord McFall-ன் இந்திய வருகை பிரிட்டன் உடனான வலுவான நாடாளுமன்ற உறவுகளை பிரதிபலிப்பதாக கூறினார்.

அவர்கள் இரு நாடுகளும் பின்பற்றி வரும் ஜனநாயக மாண்புகளின் மேன்மையை பகிர்ந்துகொண்டனர்.

சட்டத்தின் ஆட்சியை உறுதியுடன் கடைபிடிப்பது, நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை செயல்படுத்துவது, பொறுப்புடன் அவை விவாதங்களில் பங்கேற்று கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கான சுதந்திரம் உள்ளிட்ட பல விஷயங்கள் குறித்து பேச்சு நடத்தினர்.

நாடாளுமன்ற அவையில் நிறைவேற்றப்படும் சட்டங்களை தவறாக பயன்படுத்தக் கூடாது என தமது கருத்தை திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அதிகாரம் மற்றும் முக்கிய விஷயங்களில் முடிவெடுப்பதற்கான குழுக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சித் திட்டங்கள், அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான முன்னெடுப்புகள் ஆகியவற்றை தாம் ஆதரிப்பதாக அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகளில் மின்னணு கட்டமைப்பை இந்தியா கொண்டுவந்துள்ளது குறித்தும், பிரிட்டன் அவைத்தலைவரிடம் அவர் எடுத்துரைத்தார்.

மக்கள் பங்கேற்புடன், வெளிப்படைத் தன்மையுடனான பிரிட்டனின் அனுபவங்களை தாம் அறிந்துகொள்ள விரும்புவதாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

இந்தியாவின் புத்தொழில்களுக்கான உள்கட்டமைப்பு உலக வரைபடத்தில் பிரகாசமாக ஜொலிக்கிறது என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

தேசிய புத்தொழில் தினத்தையொட்டி, அவர் விடுத்துள்ள செய்தியில், இந்திய இளைஞர்கள் தங்களது அறிவாற்றல் மற்றும் செயல் திறனால் புத்தொழில்களுக்கு உயிரூட்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

புத்தொழில் வளர்ச்சிக்காக இந்தியா கடந்த பத்தாண்டுகளில் மேற்கொண்ட முயற்சிகள் இளைஞர்களின் கனவுகளை நனவாக்கியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தொழில் செய்வதற்கு உகந்த சூழ்நிலை மற்றும் பெரிய மாற்றங்களுக்கான அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் புத்தொழில்களுக்கான அங்கீகாரத்தை அளித்திருப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

கடந்த நிதியாண்டில் விவசாயிகளின் உரத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்வதில் மத்திய அரசு சாதனை படைத்துள்ளது.

ரசாயன மற்றும் உரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உரத்தேவை 15 கோடியே 25 லட்சம் பைகள் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நிலையில், மத்திய அரசு 17 கோடியே 67 லட்சத்து 90 ஆயிரம் பைகளை உற்பத்தி செய்து, விவசாயிகளின் தேவையை தாராளமாக பூர்த்தி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவைக்கும் கூடுதலாக உர உற்பத்தியை அரசு ஊக்குவித்திருப்பது விவசாயம் மற்றும் விவசாயிகள் மீது

மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி வருவதை காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிர் சாகுபடி தடையின்றி நடைபெற வேண்டும் என்ற உறுதிபாட்டுடன் அரசின் செயல்பாடுகள் உள்ளதையும் இது வெளிப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே, துறைமுகங்கள், மாநில அரசுகள் மற்றும் உர நிறுவனங்களின் ஒத்துழைப்போடு இது சாதியமாயிற்று என்றும் உர அமைச்சகம் கூறியுள்ளது.

உர நிறுவனங்களுடன் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்து உரத் தேவை மற்றும் விநியோகம் மதிப்பீடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உர அமைச்சகத்தின் இந்த முன்னெடுப்புகளின் பயனாக நாட்டின் எந்தவொரு பகுதியிலும் உரப் பற்றாக்குறை ஏற்படும் நிலை முற்றிலுமாக தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் மத்திய உர அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, மேற்குவங்கம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் நாளை தமது இரண்டுநாள் பயணத்தை தொடங்குகிறார்.

மேற்குவங்க மாநிலம் Malda நகர் ரயில் நிலையத்தில் Howrah – குவஹாத்தி இடையேயான நாட்டின் முதலாவது வந்தே பாரத்

படுக்கை வசதி கொண்ட ரயிலை காணொலி மூலம் தொடங்கிவைக்கிறார்.

நவீன இந்தியாவின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில், முழுவதும் குளிர்சாதன வசதி கொண்ட வந்தே பாரத் படுக்கை வசதி ரயில், குறைந்த கட்டணத்தில் விமான பயணத்திற்கு இணையான சேவையை மக்களுக்கு வழங்க உள்ளது.

நீண்டதூர பயணத்தை பாதுகாப்பாகவும், சொகுசு வசதியுடனும் குறைந்த நேரத்தில் முடிப்பதற்கு இந்த ரயில் உதவிகரமாக இருக்கும்.

Malda-வில் 3 ஆயிரத்து 250 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களையும் பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

மேற்குவங்க மாநிலத்தில் நான்கு முக்கிய ரயில்வேத் திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

Balurghat – Hili இடையே புதிய ரயில் பாதையையும், ஜல்பைகுரியில் ரயில் போக்குவரத்து பராமரிப்புக்கான நவீன வசதிகளையும், சிலிகுரியில் ரயில் என்ஜின் பராமரிப்பு மையத்தையும், வந்தே பாரத் ரயிலில் பராமரிப்பு மற்றும் நவீன வசதிகளுக்கான மையத்தையும் பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

இந்த பணிகள் மூலம் பயணியர் மற்றும் சரக்கு போக்குவரத்தை ரயில்வே சிறப்பாக கையாள முடியும்.

மேற்குவங்க மாநிலத்தில் சரக்கு போக்குவரத்து மேம்படுத்தப்படுவதால், புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

மால்டாவில் நான்கு புதிய அம்ரித் பாரத் ரயில்களையும் பிரதமர் தொடங்கிவைக்க உள்ளார்.

நாளை மாலை அஸ்ஸாம் மாநிலம் குவஹாத்தி செல்லும் பிரதமர் திரு நரேந்திர மோடி, அங்கு போடோ பழங்குடியின மக்களின் வரலாற்று சிறப்பு மிக்க கலை விழாவில் பங்கேற்கிறார்.

<<<<<<<<>>>>>>>

மகாராஷ்ட்ரா மாநில மாநகராட்சி தேர்தல்களில் பிஜேபி – சிவசேனா கூட்டணி வெற்றிபெறும் நிலையில் உள்ளது.

Brihanmumbai மாநகராட்சியில் இந்த கூட்டணி 119 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது.

இதில் பிஜேபி 88 இடங்களிலும், சிவசேனா 31 இடங்களிலும் முன்னிலை பெற்றுள்ளன.

சிவசேனாவின் உத்தவ் தாக்கரே பிரிவு 64 இடங்களிலும், அதன் கூட்டணி கட்சியான மகாராஷ்ட்ரா நவநிர்மாண் சேனா ஆறு இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன.

தானே மாநகராட்சியில் சிவசேனா 24 இடங்களிலும், பிஜேபி ஐந்து இடங்களிலும், தேசியவாத காங்கிரஸ் நான்கு இடங்களிலும், தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் பிரிவு நான்கு இடங்களிலும், மஜ்லிஸ் கட்சி ஐந்து இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

நவிமும்பையில் பிஜேபி 72 இடங்களிலும், சிவசேனா 27 இடங்களிலும் முன்னிலை பெற்றுள்ளன.

சிவசேனா உத்தவ் தாக்கரே பிரிவு இரண்டு இடங்களில் மட்டும் முன்னிலை பெற்றுள்ளது.

வாசை விரார் மாநகராட்சியில், பகுஜன் விகாஸ் அகாதி 63 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது.

பிஜேபி 24 இடங்களை கைப்பற்றியுள்ளது.

Panvel -ல் பிஜேபி 31 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

உல்காஸ் நகர் மற்றும் கல்யாண் டோம்பிவிலி மாநகராட்சிகளிலும் பிஜேபி – சிவசேனா கூட்டணி முன்னிலையில் உள்ளது.

<<<<<<<>>>>>>>

மகாராஷ்ட்ர மாநில மாநகராட்சி தேர்தல்களில் பிஜேபி-யின் வெற்றிக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாக அக்கட்சி கூறியுள்ளது.

புதுதில்லியில் இன்று அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு சுதான்ஷு திரிவேதி செய்தியாளர்களிடம் பேசுகையில், மும்பை தேர்தல்களில் Mahayuti கூட்டணி பெரும் வெற்றிபெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் சிறப்பான தலைமைக்கு மக்கள் அங்கீகாரம் அளித்து வருவதை இந்த வெற்றி வெளிப்படுத்துவதாக அவர் கூறியுள்ளார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாநகராட்சி தேர்தலிலும் பிஜேபி முதல் முறையாக வெற்றி பெற்றுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மும்பை மாநகராட்சி தேர்தலில் முன் எப்போதும் இல்லாத வெற்றியை பிஜேபி பதிவு செய்துள்ளதாகவும் திரு சுதான்ஷு திரிவேதி கூறியுள்ளார்.

பிஜேபி தேசிய செயலர் திரு தருண் சுக்கும், பிரதமர் திரு நரேந்திர மோடியின் கொள்கைகள், தொலைநோக்கு மற்றும் தேசிய பார்வையை அங்கீகரித்து மும்பை மாநகராட்சி தேர்தலில் மக்கள் வாக்களித்திருப்பதாக கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**சென்னையில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் – ராம்குமார் ராமநாதன் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.**

**ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-2, 7-6 என்ற செட் கணக்கில், நெதர்லாந்தின் Niels Visker — Max Houkes இணையை வென்றது.**

**மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்று, இந்தியாவின் பிரஜ்வல் தேவ் – நிதின்குமார் சின்ஹா இணையும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.**

**-------------**

**தோஹாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மணிக்கா பத்ரா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.**

**மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 9-11, 13-11, 11-5, 7-11, 11-8 என்ற செட் கணக்கில், சீனாவின் Qin Yuxuan-ஐ வென்றார்.**

**---------------**

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 1-6, 7-6, 6-1 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் Capucine Jauffret-ஐ வென்றார்.

------------------

அர்மீனியாவில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில், இந்தியாவின் Aaryan Varshney பட்டம் வென்றார்.

இதன்மூலம், இந்தியாவின் 92-ஆவது கிராண்ட் மாஸ்டராக அவர் உருவெடுத்துள்ளார்.

<<<<<<<END>>>>>>>